## பாரம்பரியச் சிலுவைப் பாதை

இயேசுவுடன் நாமும் செல்வோம். அவர் தன் சிலுவையைச் சுமந்துச் சென்றார்.அவர் கடந்து வந்த பாதையில் நடந்த சந்திப்புகள் பல. வந்த இடர்கள் பல. அனுபவித்த இன்னல்கள் பல. என்றாலும் இறுதிவரை தளராது சென்றார். சாவை வென்றார். அன்னை மரியாள் துணையாய் அவருடன் இருந்தார். வாருங்கள் நாமும் நம் சிலுவைகளைச் சுமந்து வெற்றி இலக்கை நோக்கிச் செல்வோம். இதோ அன்னை மரியாளுடன் இறைமகன் இயேசுவும் நம்முடன் வருகிறார். என் இறைவா!நன்மை நிறைந்தவர் நீர் அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர் நீர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்களை பல செய்தேன் எனவும் நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன.; உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும் பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளைவிட்டு விலகுவேன் என்றும் உறுதி கொண்டிருக்கிறேன்.

எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக இறைவா என் மேல் இரக்கமாயிரும். திவ்விய இயேசுவே!எங்களுக்காகவும் உத்திரிப்பு நிலை ஆனமாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்கள் அடைய விரும்பி உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம். புனித மரியே! வியாகுலஅன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு உடனிருந்து அவருடைய பாடுகளில் பங்கேற்றது போலää நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### முதலாம் தலம் :இயேசுநாதரைச் சாவுக்குத் தீர்வையிடுகிறார்கள்

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.
திவ்விய இயேசுவே! சிலுவையிலே நீர் அறையுண்டு சாகத் தீர்வையிடப் பட்டதைத் தியானித்து, நாங்கள் உம்மை வணங்குகிறோம். அகோரத் தீர்வையிலே நின்று எங்களை மீட்டருளும் சுவாமி.
ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

### இரண்டாம் தலம்: இயேசுநாதரின் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.
திவ்விய இயேசுவே! நீர் பாரமான சிலுவையைச் சுமந்து சென்றதைத் தியானித்து உம்மைத் ஆராதிக்கிறோம். எங்களுக்கு இவ்வுலகில் வருகிற வேதனைகளையும் தீமைகளையும் பொறுமையோடு அனுபவிக்க அருள்தாரும் சுவாமி.
ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

**மூன்றாம் தலம் : இயேசுநாதர் சிலுவையின் பாரத்தால் முதல்முறை தரையில் குப்புற விழுகிறார்.**

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! நீர் சிலுவையின் கீழே முதல் முறை குப்புற விழுந்ததைத் தியானித்து நாங்கள் உம்மை வணங்குகிறோம். நாங்கள் செய்கிற பாவங்களிலே மூர்க்கராய் நிலை கொள்ளாமல் உடனே அவைகளை விட்டு எழுந்திருக்க உதவியருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

**நான்காம் தலம் : இயேசுநாதர் தமது புனித தாயாரைச் சந்திக்கிறார்.**

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! உம்முடைய புனித அன்னை உமக்கு எதிர் கொண்டு வருகிறதைக் கண்டு நீர் சொல்லி லடங்காத வேதனையை அநுபவித்ததைத் தியானித்து உம்மைத் தொழுகிறோம். நாங்கள் சாகும் வேளையில் வியாகுல அன்னையின் அடைக்கலத்தை அடைய உதவியருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

**ஐந்தாம் தலம் :இயேசுநாதர் சிலுவையைச் சுமப்பதற்கு சீமோன் உதவி செய்கிறார்.**

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! நீர் சிலுவை சுமந்து போகிறதற்குச் சீரேன் ஊராராகிய சீமோன் உதவி செய்ததைத் தியானித்து உம்மைத ஆராதிக்கிறோம். எங்களுக்கு நியமித்திருக்கிற சிலுவையாகிய துன்பங்களை உம்மோடு கூட நாங்கள் சுமக்கக் கருணை புரிந்தருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

## ஆறாம் தலம்: இயேசுநாதருடைய திருமுகத்தை ஒரு பெண் துடைக்கிறார்.

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! வெரோணிக்கம்மாள் உம்முடைய திருமுகத்தைத் துடைத்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் ஆள் பார்த்துச் செயல்படாமல் புண்ணிய நெறியில் உறுதியாய் நடக்க உதவியருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

## ஏழாம் தலம்:இயேசுநாதர் சிலுவையின் பாரத்தால் இரண்டாம் முறை தரையில் குப்புற விழுகிறார்.

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! நீர் சிலுவையின் கீழே இரண்டாம் முறை குப்புற விழுந்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் எந்தப் பாவத்திலும் திரும்ப விழாதபடிக்குக் கருணை கூர்ந்தருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

## எட்டாம் தலம் : இயேசுநாதர் யூதப் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்.

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! உம்மை நோக்கி அழுத எருசலேம் பட்டணத்துப் பெண்களுக்கு நீர் ஆறுதல் சொன்னதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் புரிந்த பாவ துரோகங்களுக்காகத் துயரப்பட்டு, அவைகளுக்காக எப்போதும் அழுது கொண்டிருக்க அருள் பொழியும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

## ஒன்பதாம் தலம் : இயேசுநாதர் மூன்றாம் முறை தரையில் குப்புற விழுகிறார்.

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! நீர் சிலுவையின் கீழே மூன்றாம் முறை குப்புற விழுந்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள சாவான பாவத்தோடு செத்து, முடிவில்லா நரகத்திலே விழாதபடிக்கு எங்களைக் காத்தருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

## பத்தாம் தலம்: இயேசுநாதருடைய ஆடைகளைக் களைகிறார்கள்.

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! உம்முடைய ஆடைகளைக் களைந்ததையும், உமக்குப் புளித்த திராட்சை இரசத்தைக் குடிக்க கொடுத்ததையும் தியானித்து உம்மை ஆராதிக்கின்றோம். நாங்கள் அனைத்திலும் உம்முடைய திருவுளத்துக்குக் கீழ்ப்படிந்து, பொறுமையோடு நடக்க கருணை கூர்ந்தருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

## பதினோராம் தலம்: இயேசுநாதரை சிலுவையில் அறைகிறார்கள்.

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! நீர் சிலுவையில் அறையப்பட்டதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கின்றோம். நாங்கள் இவ்வுலகச் செல்வங்களையும் இன்பங்களையும் மட்டுமே நாடாமல், அவற்றைக் கொண்டு விண்ணுலக அரசினைச் சம்பாதித்துக் கொள்ள அருள் தாரும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

**பன்னிரண்டாம் தலம்: இயேசுநாதர் சிலுவையில் இறக்கிறார்.**

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! நீர் சிலுவை மரத்தில் உயிர் விட்டதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் உம்மை மாத்திரமே அன்பு செய்து, அருள் நிலையில் இறந்து விண்ணுலகில் உம்மோடு வீற்றிருக்க உதவியருளும் சுவாமி.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

**பதின்மூன்றாம் தலம் : இறந்த இயேசுநாதரை அவர் தாயார் மடியில் வளர்த்துகிறார்கள்.**

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! உம்முடைய திருச்சடலத்தை சிலுவையினின்று இறக்கி வியாகுல அன்னையின் மடியில் வளர்த்தியதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கின்றோம். எங்களுடைய இதயத்திலே உம்முடைய திருக்காயங்களும், தூய அன்னையின் வியாகுலங்களும் பதிந்திருக்க உதவியருளும் சுவாமி.
ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

**பதினான்காம் தலம் : இயேசுநாதரைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.**

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! உம்முடைய திருசடலம் அடக்கம் செய்யப்பட்டதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாகுமட்டும் உம்மை நேசிக்கவும் உம்முடைய பேரின்ப அரசுக்கு வந்து சேரவும் அருள்தாரும் சுவாமி.
ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி . எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.

**பதினைந்தாம் தலம் :இயேசுநாதர் தாம் கூறியபடியே உயிர்த்தெழுகிறார்.**

திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
ஏனெனில் உமது புனித சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

திவ்விய இயேசுவே! சிலுவையின் பாதையில் உம்மைப் பின்சென்ற நாங்கள், எங்கள் வாழ்வில் நேரிடும் துன்பங்களில் உம்முடைய பாடுகளில் இணைத்து நிறைவு செய்கிறோம் என்ற நம்பிக்கையோடு வாழவும், இவ்வாறு உயிர்ப்பின் மகிமைக்கு வந்து சேரவும் அருள்வீராக.

ஒரு பர., அருள்., திரி.
எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி . எங்கள் பேரில் தயையாயிரும் சுவாமி .
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவார்களாக!
ஆமென்.